# பல்லுக்கும் நாக்குக்கும் சண்டை

TAM203A

(ஆதாரம்: கதை அட்டை, யுரேகா சிறுவர் கதைகள்)

**மதிப்பிற்குறிய ஆசிரியர்களே!**


- உங்கள் குழந்தைகளிடம் ‘பல்லுக்கும் நாக்குக்கும் சண்டை’ என்ற கதையைச் சொல்லப்போகிறேன் என்று கூறுங்கள். தலைப்பைக் கொண்டு, கதை எதைப்பற்றியது என்பதை அவர்கள் ஊகிக்கட்டும்.
- பின் ஒவ்வொரு படமாகக் காட்டி, கதையை ஏற்ற இறக்கங்களோடும் உடலசைவுகளுடன் உணர்வுப்பூர்வமாகக் கூறுங்கள். குழந்தைகளின் கவனம் முழுவதும் உங்களிடமே இருக்க இது உதவும்.
- இடையிடையே, என்ன நடந்திருக்கும் என்று அவர்கள் ஊகித்துக் கூற இடம் கொடுங்கள். குழந்தைகளின் கற்பனை செய்தல், ஊகித்தறிதல், அனுமானித்தல், சிந்தித்தல், சூழலோடு பொருத்திப் பார்த்தல் போன்ற மொழித்திறன்களோடு சொற்களஞ்சியமும் பெருகும்.
- கதை கூறி முடித்ததும், ஒவ்வொரு படமாகக் காட்டி, கேள்விகளைக் கேட்டு மாணவர்களிடமிருந்து கதைவரிகளை வரவழையுங்கள்
- அவர்கள் கூறுவதை அவர்கள் மொழியிலேயே கரும்பலகையில் எழுதுங்கள். அல்லது அனைத்து மாணவர்களின் ஒத்திசைவோடு, கதைப்புத்தகத்தில் வரும் வாக்கியங்களுக்கு நிகரான வாக்கியங்களை வரவழைத்து எழுதுங்கள்.
- இவ்வாறு செய்யும் போது, கேட்டல்-பேசுதல்-எழுதுதல்-வாசித்தல் ஆகிய 4 திறன்களுக்கு இடையே உள்ள தொடர்பை மாணவர்கள் தாமாகவே உணர்ந்துகொள்ள வாய்ப்பாக அமையும்.

## I. கதை கூறல் – அறிமுக உரையாடல்:

| | | | |
|---|---|---|---|
| 1 | தலைப்பைக் கொண்டு மாணவர்கள் கதை எதைப்பற்றியது என்பதை அவர்கள் ஊகித்தல். | 2 |  நாக்கை வம்புக்கு இழுத்தது. அது நாக்கிடம், “ஏ நாக்கே! நானே உன்னை விட உயர்ந்தவன்”என்றது. |
| 3 |  “நான் தான் பல ருசிகளைத் தெரிய வைக்கிறேன்” என்றது நாக்கு. “நான் தான் உணவைக் கடித்து நொறுக்குகிறேன்” என்றது பல் | 4 |  நாக்கு, “நான் உன்னை விட நீளமானவன்” என்று கூறியது. நான் உன்னைக் கடித்து விடுவேன் என்று கூறியது |
| (இப்படிச் சொன்னதும் நாக்கிற்கு கோபம் வந்து விட்டது. இந்தப் பல்லுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று திட்டம் போட்டது. அப்போது சாலையில் ஒருவர் சென்றுகொண்டிருந்தார்.) | | | |
| 5 |  உடனே நாக்கு, “டேய்” என்று சத்தமாக அழைத்தது. மறுபடியும் நாக்கு, “உன்னைத்தான்டா” என்றது. | 6 |  அவர் திரும்பிப் பார்த்து, வாயில் ஓங்கி குத்துகிறார். பற்கள் எல்லாம் உடைந்து கீழே விழுகின்றன. |
| 7 |  “இனிமேல் நான் வம்புக்கு வரமாட்டேன். அவரிடம் மன்னிப்பு கேட்டு அனுப்பு” என்றது பல். நாக்கு அவரிடம் மன்னிப்பு கேட்டதும் அந்த மனிதர் சென்றுவிட்டார். | 8 |  அன்றிலிருந்து இருவரும் சண்டை போடாமல் நண்பர்கள் ஆனார்கள். |

(நாம் சுவையை எப்படி உணர்கிறோம் என்று மாணவர்களுக்கு உணர்த்த, ஆசிரியர் ஒரு சிறிய உரையாடலை நிகழ்த்தலாம் – ஒரு உணவுப்பொருளைப் பல்லில் வைத்தால் அதன் சுவையை உணர முடியுமா? அல்லது நாக்கில் வைத்தால் உணரமுடியுமா? முடிந்தால் ஏதேனும் ஒரு உணவைக் கொடுத்துச் சுவைக்க வைக்கலாம்- ஒரு குழந்தை கண்ணை மூட, வேறொரு குழந்தை ஒரு வெல்லக்கட்டி / புளியை முதலில் பல்லிலும் பிறகு நாக்கிலும் வைக்க வேண்டும்)


## II. மாணவர்கள் கதையை வாசித்தல்:



- கரும்பலகையில் உள்ள கதைக்குறிப்புகள் மற்றும் கதைப்படங்கள் மூலம் ஆசிரியர் முழுக்கதையையும் கூறுதல்
- அனைத்து மாணவர்களும் உரையாடி, முடிவுசெய்யும் கதைவரிகளைக் கரும்பலகையில் எழுதுதல்
- கரும்பலகையில் உருவாக்கப்பட்ட கதையை ஆசிரியர் மாணவர்களுக்காக வாசித்தல்
- மாணவர்கள் அனைவரும் தங்கள் உருவாக்கிய கதைவரிகளைத் தங்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுதுதல்
- மாணவர்கள் சிறு குழுக்களாக அமர்ந்து கதைகளை வாசித்தல்

## III. வகுப்பறை செயல்பாடுகள்:

1. நமது வகுப்பறையில் ‘உயர்ந்தவர்’ என்று யாராவது இருக்கிறார்களா? (ஆசிரியர் எல்லா மாணவர்களும் சமம் என்ற உரையடலை இங்கு நிகழ்தலாம்)
2. இந்த கதையைக் காமிக் கதையாக வரைந்து, உரையாடலை எழுது. உதாரணமாக,
3. இதுபோல ஒரு உரையாடலை வேறு சில இணைகளைக் கொண்டு கதையாக எழுது அல்லது படக்கதை உருவாக்கு.
   - கண் – காது
   - வேர் – கிளை – பழம்
   - பேனா – நோட்டு
   - ஏதேனும் ஒரு காய் – ஏதேனும் ஒரு பழம்
   - நாய் குட்டி – பூனைக்குட்டி



**கற்றல் பயணத்திற்கான செயல்பாடு:** மேலே உள்ள சில இணைகள் தங்களுக்குள் உடையாடிக்கொண்டால் எப்படி இருக்கும் என்பதை மாணவர்கள் கதையாகவோ, உரையாடலாகவோ, காமிக் கதையாகவோ எழுதலாம். ஆசிரியர் அனைத்து மாணவர்களின் படைப்புகளையும் எங்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

## IV. இக்கருத்தைக் கூறும் வேறு சில கதைகள்:

**1. ஐந்து விரல்கள்**



விரல்களுக்கிடையே யார் பெரியவர் என்ற சண்டை. ஒவ்வொரு விரலும் ஒவ்வொரு வகையில் சிறந்தது என்று உரையாடுதல். அனைவரும் சமம் என்று உணர்தல்.

5ஆம் வகுப்பு, 2ஆம் பருவம், ‘ஒற்றுமையே பலம்’ பாடம்

**2. ஒற்றுமையே பலம்**



ஒரு விவசாயி தனது 3 மகன்களை அழைத்தார். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட எண்ணினார். ஒரு கட்டு குச்சிகளைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். யாராலும் முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு குச்சியாக உடைக்க முடிந்தது. https://www.youtube.com/watch?v=FsO-XCszTZY


**3. வேடனும் புறாக்களும்**



ஒரு புறாக்கூட்டம் உணவு தேடி அலைந்தது. ஒரு இடத்தில் தானியங்கள் கொட்டிக் கிடப்பதைப் பார்த்தன. கூட்டத்தின் தலைவன் தடுத்தும் கேட்கவில்லை. வேடன் விரித்து வைத்திருந்த வலையில் சிக்கிக் கொண்டன. அனைத்து புறாக்களும் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் வலையோடு பறந்து தப்பித்தன.


https://www.youtube.com/watch?v=UdCbxJr2Ev0

**4. சிங்கமும் மாடுகளும்**



காட்டிற்கு அருகில் நான்கு மாடுகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. சிங்கம் அவற்றைச் சாப்பிட விரும்பியது. ஆனால் முடியவில்லை. நரி ஒன்று அவைகளுக்குள் சண்டை மூட்டியது. அவைகள் பிரிந்து, புல்மேய்ந்தன. சிங்கம் ஒவ்வொன்றாக வேட்டையாடியது. https://www.youtube.com/watch?v=L_Dj26nHFdg

**5. நான்கு நண்பர்கள்**



மான், ஆமை, காகம், எலி ஆகிய நால்வரும் நண்பர்கள். ஒரு நாள் மான் வேடனின் வலையில் சிக்கிக் கொண்டது. எலி அதனை விடுவித்தது. ஆனால் ஆமை மாட்டிக்கொண்டது. மற்ற மூவரும் திட்டமிட்டு அதனை விடுவித்தனர். அனைவரும் தப்பி ஓடினர். https://www.youtube.com/watch?v=eky1SCBmKHw